உ

சிவமயம்



மட்டக்களப்பு - துறைநீலாவணை

அமரர் திருமதி. தங்கநாயகம் செல்லத்துரை அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

18-09-2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மட்டக்களப்பு - துறைநீலாவணை

## அமரர் திருமதி தங்கநாயகம் செல்லத்துரை

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**18-09-2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின்

குலவிளக்காய், வழிகாட்டியாக

இருந்து அன்போடும், பாசத்தோடும்

அரவணைத்துக் காவல் தெய்வமாக விளங்கிய

**திருமதி. தங்கநாயகம் செல்வத்துரைக்கு**

இம்மலரைச் சமர்ப்பணமாக்குகின்றோம்.

இங்ஙனம்


**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# திருமதி. தங்கநாயகம் செல்லத்துரை

**தோற்றம்: 01-10-1934** **மறைவு: 17-08-2010**

## திதி நிர்ணய வெண்பா

விகிர்தி வருடம் விளங்கிடும் அம்புலி வளர்பக்கம்
அகிலத்தில் சிறந்த அட்டமித் திதி விசாக நட்சத்திரத்தில்
பிராமிய யோகத்தில் வானுலகோர் வந்து வரவேற்க
மண்ணுலகினின்றும் மங்கையாம் தங்கநாயகி
விண்ணுலகிற்கு விடைபெற்றேகினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்

*திருச்சிற்றம்பலம்*

## கணபதி துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

பிடியதனுருவுமை கொளமிகு கரியது
வடிகொடுதனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவரவருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறையிறையே.

மங்கையற்கரசி வளவர்கோன் பாவை
வரிவளை கைம்மடமானி
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி
பணிசெய்து நாடோறும் பரவ
பொங்கழலுருவன் பூதநாயகனார்
வேதமும் பொருள்களும் அருளி
யங்கயற்கண்ணி தன்னொடுமமர்ந்த
வாலவாயாவது மிதுவே.

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே.
இதுவோ எமையாளுமாறு
ஈவதென்றெமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து
நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும்
விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா
அன்புனக்கென
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள்எம்
உடையானே.

யானே பொய்என் நெஞ்சும்
பொய்என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்
தளிவே தித்திக்கும்
மானே அருள்வாய் அடியேன்
உனைவந் துறுமாறே.

கடையவ னேனைக் கருணையி னாற்கலந்
தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல்
வேங்கையின்தோல்
உடையவ னேமன்னு உத்தர கோசமங்
கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்பிரான் என்னைத்
தாங்கிக் கொள்ளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக்கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக்கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளங்
குளிர என் கண் குளிர்ந்தனவே.

இடர்கெடுத்தென்னையாண்டு கொண்டென்னுள்
இருட் பிழம்பற வெற்றித் தெழுந்தே
சுடர்மணி விளக்கினுள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ
அடல் விடைப்பாகவம்பலக் கூத்தர்
அயனொடு மாலறியாமைப்
படரொளிபரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரமன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

மிண்டு மனத்தவர் போமின்கண் மெய்யடியார்கள்
விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடி குடி ஈசற்கு
ஆட்செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள் அளவில்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே.

மன்னுகதில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்ன நடைமடவாளுமை கோனடி யோ
முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியபுராணம்

இறவாதயின்ப வன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேலுனையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும்வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீயாடும் போதுன்னடியின் கீழிருக்க வென்றார்.

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனையற மாற்றும் பாங்கிலோங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானமுணர்வரிய மெஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணந்தாரந்நிலையில்

ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையேயாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்துவிகமேயாக
இந்துவாழ் சடையனாடும் ஆனந்தஎல்லையில்
தனிப் பெரும் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

*திருச்சிற்றம்பலம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

## திருவாசகச் சிறப்பு

தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
வாகம மாகிநின் றண்ணிப்பான் றாள் வாழ்க
ஏகன் னநேக னிறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈச னடிபோற்றி யெந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி
ஆராத வின்ப மருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையு ணின்ற வதனா
லவனரு ளாலே யவன்றாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய வுரைப்பன்யான்
கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியா
யெண்ணிறந் தெல்லை யிலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்து
ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்து ளோங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
யெஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே
ஆக்க மளவுறுதி யில்லா யனைத்துலகு
மாக்குவாய் காப்பா யழிப்பா யருள் தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய்நின் றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுட் டேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கு மெங்கள் பெருமா
னிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன்றன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
அறம்பாவ மென்னு மருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்குமூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த வடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச வருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெட
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே யளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே நுண்ணிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்டவெந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே!
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா வரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே!
நள்ளிருளி னட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரு மேத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை



ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்

சீதக் களபச்செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாட
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்ப
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாஹன
இப்பொழுது என்னை ஆட்கொள்ள வேண்டி
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளி
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தறி வித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்தி
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முகச் சூஷ்மமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கிய எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்து அருள்வழி காட்டி
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

(விநாயகர் அகவல் முற்றிற்று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்
னேதேனு மாகாள் கிடந்தா ளென்னேயென்னே
யீதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக் கென்பா யிராப்பகனாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் றில்லைச்சிற் றம்பலத்து
ளீசனார்க் கன்பர்யா மாரேலோ ரெம்பாவாய்.

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
னத்த னானந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
வெத்தோநின் னன்புடைமையெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நம்சிவனை
யித்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய்.

ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
வெண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ள
முண்ணெக்கு நின்றுருக யாமாட்டோ நீயேவந்
தெண்ணிக்குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோல மிடினு முணரா யுணராய்கா
ணேலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலு நாணாமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே யறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவா
யூனே யுருகா யுனக்கே யுறுமெமக்கு
மேனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமர
ருன்னற் கரியா னொருவ னிருஞ்சீ ரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பா
யென்னானை யென்னரைய னின்னதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியா
லென்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கு
மேழி லியம்ப வியம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவா
யாழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
வூழி முதல்வனாய் நின்ற வொருவனை
யேழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
யுன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோ
முன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோ
மன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோ
மின்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியே
லென்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய்.

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலு
மோத வுலவா வொருதோழன் றொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகா
ளேதவனூ ரேதவன்பே ராருற்றா ராரயலா
ரேதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
யையாவழியடியோம் வாழ்ந்தோங்கா ணாரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
வையாநீ யாட்கொண் டருளும் விளையாட்டி
னுய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோ
மெய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைக
ளார்ப்பரவஞ் செய்ய வணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாத
மேத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதா
லங்கங் குருகினத்தாற் பின்னு மரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினா
வெங்கள் பிராட்டியுமெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்வாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
யாதி திறம்பாடி யந்தமா மாபாடி
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய்.

ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறு
மாரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
யேருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையா
ளென்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவ
மென்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையா
டன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

செங்க ணவன்பாற் றிசைமுகன்பாற் றேவர்கள்பா
லெங்கு மிலாததோ ரின்பநம் பாலதா
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
யிங்குநம் மில்லங்க டோறு மெழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
யங்க ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

அண்ணா மலையா னடிக்காமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்பரப்பத்
தண்ணா ரொளிமழுங்கத் தாரகைக டாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தா
லெங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கே
ளெங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
வெங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
விங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியே
லெங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.

போற்றியருளுகநின் னாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறா மிணையடிகள்
போற்றிமா னான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற் சுண்ணம்

திருச்சிற்றம்பலம்

முத்துநற் றாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபநற் றீபம் வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளு
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும்வந்து கவரிகொண்மி
னத்தனை யாறனம் மானைப்பாடி
யாடற்பொற் சுண்ண மிடித்துநாமே. 1

பூவியல் வார்சடை யெம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ண மிடிக்கவேண்டு
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் றொண்டர் புறநிலாமே
குனிமின் றொழுமினெங் கோனெங்கூத்தன்
றேவியுந் தானுவந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே. 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
யிந்திரன் கற்பக நாட்டியெங்கு
மெழிற்சுடர் வைத்துக் கொடியெடுமி
னந்தரர் கோனயன் றன்பெருமா
னாழியா னாதனல் வேலன்றாதை
யெந்தர மாளுமை யாள்கொழுநற்
கேய்ந்தபொற் சுண்ண மிடித்துநாமே. 3

காசணி மின்களு லக்கையெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய வடியவர்க
ணின்று நிலாவுக வென்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாசவினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுகெடுப் பாராய னும்மரியு
மன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லா
நம்மிற்பின் பல்ல தெடுக்கவொட்டோஞ்
செறிவுடை மும்மதி லெய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 5

உலக்கை பலவோச்சு வார்பெரிய
ருலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க வடியவர் வந்துநின்றார்
காண வுலகங்கள் போதாதென்றே
நலக்க வடியோமை யாண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ண மிடித்துநாமே. 6

சூடகந் தோள்வளை யார்ப்பவார்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பவார்ப்ப
நாடவர் நந்தம்மை யார்ப்பவார்ப்ப
நாமு மவர்தம்மை யார்ப்பவார்ப்ப
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கின னெங்கள் பராபரனுக்
காடக மாமலை யன்னகோவுக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 7

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை யார்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சேர்த்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
யாட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையக மெல்லா முரலதாக
மாமேரு வென்று முலக்கைநாட்டி
மெய்யெனு மஞ்ச ணிறையவட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொ னுலக்கைவ லக்கைபற்றி
ஐயய னணிதில்லை வாணனுக்கே
யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 9

முத்தணி கொங்கைக ளாடவாட
மொய்குழல் வண்டின மாடவாடச்
சித்தஞ் சிவனொடு மாடவாடச்
செங்கயற் கண்பனி யாடவாடப்
பித்தெம் பிரானொடு மாடவாடப்
பிறவி பிறரொடு மாடவாட
வத்தன் கருணையொ டாடவாட
வாடப்பொற் சுண்ண மிடித்து நாமே. 10

மாடு நகைவா ணிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமி னந்தம்மை யாண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமி னெம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
யாடுமி னம்பலத் தாடினானுக்
காடப் பொற்சுண்ண மிடித்து நாமே. 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்றன்னை
ஐயனை யையர் பிரானைநம்மை
யகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோட்
பையர வல்குன்ம டந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே. 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீ
ரென்னுடை யாரமு தெங்களப்ப
னெம்பெரு மானிம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்றகப்பன்
றமையனெம் மையன் றாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே. 13

சங்கம ரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாட
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை யிரைப்ப வராவிரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே. 14

ஞானக் கரும்பின் றெளிவைப்பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம்பு குந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானற் றடங்கண்ம டந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே. 15

ஆவகை நாமும்வந் தன் பர்தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேற்
றேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவக மேந்தியவேல் கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவக னாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே. 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடை மேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடிவ லக்கையேந்து
மூனக மாமழுச் சூலம்பாடி
யும்பரு மிம்பரு முய்யவன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே. 17

அயன்றலை கொண்டுசெண் டாடல்பாடி
யருக்க னெயிறுப றித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலா லுதைத்தல் பாடி
யியைந்தன முப்புர மெய்தல் பாடி
யேழை யடியோமை யாண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ண மிடித்துநாமே. 18

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும்பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
விட்டுநின் றாடு மரவம்பாடி
யீசற்குச் சுண்ண மிடித்துநாமே. 19

வேதமும் வேள்வியு மாயினார்க்கு
மெய்ம்மையும் பொய்மையு மாயினார்க்குச்
சோதிய மாயிரு ளாயினார்க்குத்
துன்பமு மாயின்ப மாயினார்க்குப்
பாதியு மாய்முற்று மாயினார்க்குப்
பந்தமு மாய்வீடு மாயினாருக்
காதியு மந்தமு மாயினாருக்
காடற்பொற் சுண்ண மிடித்துநாமே. 20

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

உ
சிவமயம்



# கந்தர் சஷ்டி கவசம்

**காப்பு**

**நேரிசை வெண்பா**

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலர்அருள் கந்தர்
சஷ்டி கவசம் தனை.

**குறள் வெண்பா**

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

**நூல்**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி ஆட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக வருக மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக!
வாசவன் மருகா வருக வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறு முகம்படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரிரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதிஎன் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க!
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க!
பன்னிரு விழியால் பாலனைக் காக்க!
அடியேன் வதனம் அழகுவேல் காக்க!
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க!
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க!
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க!
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க!
பேசிய வாய்தன்னைப் பெருவேல் காக்க!
முப்பத் திருபல் முனைவேல் காக்க!
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க!
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க!
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க!
மார்பை இரத்தின வடிவேல் காக்க!
சேரிள முலைமார் திருவேல் காக்க!
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க!
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க!
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க!
பழுபதி னாறும் பருவேல் காக்க!
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க!
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணாங் கயிற்றை நல்வேல் காக்க!
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க!
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க!
வட்டக் குதத்தை வடிவேல் காக்க!
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க!
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க!
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க!
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க!
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க!
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க!
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க!
முப்பால் நாடியை முனைவேல் காக்க!
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க!
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க!
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க!
அரையிருள் தன்னில் அணையவேல் காக்க!
ஏமத்தில் ஜாமத்தில் எதிர்வேல் காக்க!
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க!
காக்க காக்க கனகவேல் காக்க!
நோக்க நோக்க நொடியில் நோக்க!
தாக்க தாக்க தடையறத் தாக்க!
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வாலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லிலும் மிருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தன்எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு!
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது லாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடப்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17

கடிவிட விஷங்கள் கடுத்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்
சூலை சயம்குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரீதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைதாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழ்ஒளி பவனே
பரிபுர பவனே பவம்ஒழி பவனே
அரிதிரு மருகா அமரா வதியை
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பாலகு மாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யான்உனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவிநன் பூதியை
நேசமு டன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க!
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்!
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன்என் மீதுன் மனமகிழ்ந் தருளி
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேசமு டன்ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுஉருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்த்தங் கருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலஷ்மிகளில்
வீர லஷ்மிக்கு விருந்துண வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழுவர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேளே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே!
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்!
சரணம் சரணம் சரவண பவஓம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்!

(கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74

## சகலகலா வல்லிமாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாதுகொ
லோசகமேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே. 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே. 2

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே. 3

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக்கடலே
சகல கலாவல்லியே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத்திருந்தாய்
சகல கலாவல்லியே. 5

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலுங் வெங்காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே. 6

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந்தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப்பேடே
சகல கலாவல்லியே. 7

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ் சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கும் பொருட்கு முயிரா மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே. 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே. 10

## அபிராமி அம்மைப் பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இல்லாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய நின் பாதத்தில் அன்பும் உதவிப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்!
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைத் தாமரை

திருச்சிற்றம்பலம்

வெள்ளைத்தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளையின்பம் குலவு கவிதை
கூறுபாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ளதாம் பொருள் தேடியுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின்றொளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத்துட் பொருளாவாள்.

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்
கோதகன்ற தொழிலுடைத்தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்ப மேவடி வாகிடப் பெற்றாள்.

வஞ்ச மற்ற தொழில் புரிந்துண்டு
வாழும் மாந்தர் குலதெய்வ மாவாள்
வெஞ்ச மர்க்குயிராகிய கொல்லா
வித்தை யோர்ந்திடு சிற்பியர் தச்சர்
மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்
வீர மன்னர் பின் வேதியர் யாரும்
தஞ்சமென்று வணங்கிடுந் தெய்வம்
தரணி மீதறி வாகிய தெய்வம்

தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்
தீமை காட்டி விலக்கிடுந் தெய்வம்
உய்வ மென்ற கருத்துடையோர்கள்
உயிரினுக் குயிராகிய தெய்வம்
செய்வமென்றொரு செய்கை யெடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்
கைவருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம் கடவுளர் தெய்வம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழ்மணி நாட்டிடையுள்ளீர்
சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்
வந்தனம் இவட்கே செய்வதென்றால்
வாழி ய∴திங் கெளிதன்று கண்டீர்
மந்திரத்தை முணுமுணுத் தேட்டை
வரிசையாக அடுக்கி அதன்மேல்
சந்தனத்தை மலரை இடுவோர்
சாத்திரம் இவள் பூசனையன்றாம்.

வீடுதோறும் கலையின் விளக்கம்
வீதிதோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்களெங்கும் பல பல பள்ளி
தேடு கல்வியிலாத தொரூரைத்
தீயினுக்கிரையாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியினை கண்டீர்.

ஊணர் தேசம் யவனர்தந் தேசம்
உதய ஞாயிற்றொளி பெறுநாடு
சேண கன்றதோர் சிற்றடிச்சீனம்
செல்வப் பார சிகப் பழந் தேசம்
தோண லத்த துருக்கம் மிசிரம்
சூழ்கடற்கப் புறத்தினில் இன்னும்
காணும் பற்பல நாட்டிடையெல்லாம்
கல்வித் தேவியின் ஒளிமிகுந்தோங்கி.

ஞானம் என்பதோர் சொல்லின் பொருளாம்
நல்ல பாரத நாட்டிடை வந்தீர்
ஊனம் இன்று பெரிதிழைக் கின்றீர்
ஓங்கு கல்வி யுழைப்பை மறந்தீர்
மான மற்று விலங்குகளொப்ப
மண்ணில் வாழ்வதை வாழ்வெலாமோ?
போன தற்கு வருந்துதல் வேண்டா
புன்மை தீர்ப்ப முயலுவம் வாரீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம்பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர்விளங்கி யொளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியங்கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்.

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவு மற்றவர் வாய்ச்சொல் அருளீர்
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்
மதுரத் தேமொழி மாதர்களெல்லாம்
வாணி பூசைக் குரியன பேசீர்
எதுவும் நல்கியுங் செவ்வகையானும்
இப்பெருந்தொழில் நாட்டுவம் வாரீர்.

## சரஸ்வதி தோத்திரம்

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியாசனத்தில் அரசரோடெம்மைச்
சரியாசனம் வைத்த தாய்.

ஆயகலைகள் அறுபத்துநான் கினையும்
ஏய உணர்விக்கும் என் அம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தின் உள்ளே
இருப்பள் இங்கு வராது இடர்.

படிகநிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற்கையும் - துடிஇடையும்
அல்லும் பகலும் அனவரதமுந் துதித்தாற்
கல்லுஞ் சொல்லாதோ கவி.

## அபிராமி அந்தாதி

தனம் தரும் கல்வி தரும் ஒருநாளுந் தளர்வுஅறியா
மனம் தரும் தெய்வவடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்துப் பிள்ளையார் பாடல்

அன்ன விசாரம் அதுவே விசாரம் அதுவொழிந்தாற்
சொன்ன விசாரம் தொலையா விசாரம் நற்றோகையரைப்
பன்ன விசாரம் பலகால் விசாரம் இப்பாவிநெஞ்சுக்
கென்ன விசாரம் வைத்தாயிறைவா கச்சியேகம்பனே.

கல்லாப்பிழையும் கருதாப்பிழையும் கசிந்துருகி
நில்லாப்பிழையும் நினையாப்பிழையுந் நின்னஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையும் துதியாப்பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே.

கட்டியணைத்திடும் பெண்டிரு மக்களுங் காலத்தச்சன்
வெட்டிமுறிக்கும் மரம்போற் சரீரத்தை வீழ்த்திவிட்டாற்
கொட்டி முழங்கியழுவார் மயானங்குறுகியப்பால்
எட்டியடிவைப்பாரோ விறைவா கச்சியேகம்பனே.

பிறக்கும் பொழுது கொண்டு வந்ததில்லை பிறந்த மண்மேல்
இறக்கும் பொழுது கொண்டுபோவதில்லை யிடைநடுவிற்
குறிக்குமிச்செல்வஞ் சிவன் தந்ததென்று கொடுக்கறியா
திறக்குங்குலாமருக்கென் சொல்லுவேன் கச்சியேகம்பனே.

ஊருஞ்சதமல்லவுற்றார் சதமல்லவுற்றுப்பெற்ற
பேருஞ்சதமல்ல பெண்டிர்சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ்சதமல்ல செல்வஞ்சதமல்ல தேசத்திலே
யாருஞ்சதமல்ல நின்றாள் சதங்கச்சியேகம்பனே.

பிறந்து மண்மீதிற் பிணியே குடிகொண்டு பேரின்பத்தை
மறந்து சிற்றின்பத்தின்மேன்மையலாகி புன்மாதருக்கு
பறந்துழன்றே தடுமாறிப் பொன்றேடியப் பாலையர்க்கீந்
திறந்திடவோ பணித்தாயிறைவா கச்சியேகம்பனே.

ஐயுந்தொடர்ந்து விழியும் செருகியறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்யான்
செய்யும் திருவொற்றியூருடையீர் திருநீறுமிட்டுக்
கையுந் தொழப் பண்ணி ஐந்தெழுத்தை ஓதவும் கற்பியுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பெற்ற தாயாரும் என்னைப் பிணமென்றிகழ்ந்து விட்டார்
பொன் பெற்ற மாதரும் போவென்று சொல்லிப் புலம்பி விட்டார்
கொன் பெற்ற மைந்தரும் பின் வலம் வந்து குடமுடைத்தார்
உன்பற்றொழிய லொருபற்றுமில்லையுடையவனே.

தாயாருஞ் சுற்றமும் பெண்டிருங்கைவிட்டுத் தாழ்திடு நாள்
நீயாரு நானாரெனப் பகர்வாரந்த நேரத்திலே
நோயாரும் வந்து குடிகொள்வாரே கொண்டநோயுமொரு
பாயாரு நியுமல்லாற் பின்னையேது நட்பாமுடலே.

அன்னையெத்தனை யெத்தனை அன்னையோ
அப்பனெத்தனை யெத்தனையப்பனோ
பின்னையெத்தனை யெத்தனை பெண்டிரோ
பிள்ளையெத்தனை யெத்தனை பிள்ளையோ
முன்னை யெத்தனை யெத்தனை சென்மமோ
மூடனாயடியேனுமறிந்திலேன்
இன்னமெத்தனை யெத்தனை சென்மமோ
என் செய்வேன் கச்சியேகம்பநாதனே.

ஆவியோடு காயம் அழிந்தாலும் மேதினியில்
பாவி என்ற நாமம் படையாதே - மேவியசீர்
வித்தாரமும் கடம்பும் வேண்டா மடநெஞ்சே
செத்தாரைப்போலவே திரி.

வாளான்மகவரிந்தூட்டவல்லேனல்லன் மாது சொன்ன
ஆளாவிளமை துறக்க வல்லேனல்லன் றொண்டு செய்து
நானாநிற் கண்ணிடந் தப்பவல்லேனல்லன்
நானிச் சென்று ஆளாவது எப்படியோ திருக்காளத்தி அப்பருக்கே.

முடிசார்ந்த மன்னரு மற்று முன்னோரு முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதுங் கண்டு பின்னுமித்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லாற் பொன்னினம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றேயறிவாரில்லையே.

பிறவாதிருக்க வரம் பெறல் வேண்டும் பிறந்துவிட்ட
இறவாதிருக்க மருந்துண்டு காணிது வெப்படியோ
அறமார் புகழ்தில்லையம்பலவாணரடிக்கமல
மறவாதிரு மனமேயதுகாணன் மருந்துனக்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடராசப்பத்து

தாயார் இருந்தென்ன தந்தையும் இருந்தென்ன
தன்பிறவி உறவுகோடி தனமலை குவித்தென்ன
கணபெயர் எடுத்தென்ன தாரணியை ஆண்டும் என்ன
நேயர்கள் இருந்தென்ன குருவாய்த்திருந்தென்ன
சீஷர்கள் இருந்தென்ன சித்துபலகற்றென்ன
நித்தமும் விரதங்கள் செய்தென்ன நதிகளெல்லாம்
ஓயாது மூழ்கினும் என்ன பலன்
எமனோலை ஒன்றைத் தடுக்க வருமோ
இதுவெல்லாம் சந்தை உறவு என்று கண்டு
உன்னிரு பதம்பிடித்தேன் யார் மீது உன்மனம்
இருந்தாலும் உன்கடைக்கண்பார்வையது போதுமே.
ஈசனே சிவகாமிநேசனே எனையீன்ற தில்லைவாழ் நடராசனே.

# வடிவுடையம்மன் விருத்தம்

தாயது வயிற்றிலே மாயமாய்த்தரித்து நான்
தங்கினேன் அங்கு சிலநாள்
தரணியில் வீழ்ந்தபின் புழுதியில் புரண்டுந்
தவழ்ந்தடி நடந்து சிலநாள்
காயமும் வளர்ந்திந்த பாரினில் உழன்று மிகக்
காளையாய்த் திரிந்து சிலநாள்
காமனால் வதங்கியே ஊமைபோல் மயங்கிக்
கருத்தது அழிந்து சிலநாள்
மாய்கையாலே லோக வாழ்க்கைதனை மெய்யென்று
மயங்குதென் மனதிலம்மா
மாறாது பிறவியது யாராலெடுக்கத் தாம்மைந்தன்
சுமக்க வசமோ
தாயென்று நானம்பினேன் அருள்புரிவை
தரணிபுகழொற்றியூர் வாழ்
தங்கமயிர் நாதர்சடை கங்கையுருவானகொடி
திங்களொளிவான வடிவே....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

கைத்தல நிறைகனியப்பமொடவல் பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடுமடியவர் புத்தியிலுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மந்தமும் மதியமும் வைத்திரு மரண்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழடைவினை முற்படுகிரிதனில்
முற்படி எழுதிய முதல்வோனே
முப்புரமெரிசெய்த அச்சிவனுறை ரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துயரதுகொடு சுப்பிரமணிபடும்
அப்புன மதனிடை கிபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கணமணமருள் பெருமாளே.

பாதிமதிநதி போது மணிசடை
நாதனருளிய குமரேசா
பாகுகனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காதுமொருவிழி காகமுற அருள்
மாயனரிதிரு மருகோனே
காலனெனை அணுகாமலுனதிரு
காலில் வழிபட அருள்வாயே
ஆதி அயனொடு தேவர் சுரருல
ஆளும் வகையறு சிறைமீளா
ஆடுமயிலினில் ஏறி அமரர்கள்
சூழ வலம் வரும் இளையோனே
சூத மிகவளர் சோலை மருவுசு
வாமி மலைதனில் உறைவோனே
சூரனுடலற வாரி சுவறிட
வேலை விடவல பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபரன் எனவோது
முக்கட் பரமற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரு
முப்பத்து மூவர்கத் தமரரும் அடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடும்
ஒற்றைக்கிரி மத்தைப் பொரு தொரு
பட்டப்பகல் வட்டத்திகிரியில் இரவாகப்
பத்தற்கிரதத்தைக் கடவிய
பச்சைப் புயல் மெச்சத் தகுபொருள்
பக்ஷித்தொடு ரக்ஷித் தருள்வதும் ஒருநாளே
தித்தித் தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்க நடிக்கக் கழுகொடு கழுகாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத் தொகு தோக்குத் தொகு தொகு
சித்ரப் பவுரிக்குத் ரிகடக எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகு குகு
குந்திப் புதை புக்குப்பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற்றவுணரை
வெட்டிப்பலியிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல பெருமாளே.

உம்பர் தருத் தேனுமணிக் கசிவாகி
ஒன்கடலிற்றேனமுதற் றுணர்வூறி
இன்பரசத் தேன் பருகிப் பலகாலும்
என்றனுயிர் வாதரவுற் றருள்வாயே
தம்பி தனக்காக வந்த தலையோனே
தந்தை வலத்தாருள்கைக் கனிவோனே
அன்பர் தனக்காக நிலைப் பொருளோனே
ஐந்து கரத்தானை முகப் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி. தங்கநாயகம் செல்லத்துரையின் வாழ்க்கை வரலாறு

மட்டக்களப்பு துறைநீலாவணை என்னும் கிராமத்தில் 01-10-1934 அன்று திரு. வயிரமுத்து செல்லையா, திருமதி. உலகநாதன் சந்தணப்பிள்ளை தம்பதிகளுக்கு ஆறாவது பிள்ளையாகப் பிறந்தார். "ஆறாங்கால் பெண் பிறந்தால் அடுக்களையும் பொன்னாகும்" என்ற கிராமிய பழமொழிக்கேற்ப அவர் பிறந்த பின்னர் குடும்ப நிலை உயர்ந்து செல்வம் பெருகியதாக அவர் வாயிலாக அறியக் கூடியதாக இருந்தது.

மட்/துறைநீலாவணை மெ.மி.த.க. பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பெற்று ஆறாம் வகுப்பிலிருந்து அக்காலம் G.B.S. என அழைக்கப்பட்ட உவெஸ்லி பாடசாலையில் சேர்ந்து கல்விகற்று 1952ம் ஆண்டு சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் (S.S.C) பரீட்சையில் பலதிறமைச் சித்திகளோடு தேறினார். ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் சேர்வதற்கான புகுமுகப் பரீட்சையில் (Entrance Exam) தேறி 1956-1957ம் ஆண்டுகளில் மட்/ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்று வெளியேறினார்.

இவர் ஒரு இந்துவாக இருந்தும் செல்வி தில்லையம்பலம் என்ற இவரது ஆசிரியரின் தூண்டுதலின் பேரில் அக்காலத்தில் மெதடிஸ்த மிசன் பாடசாலைகளின் முகாமையாளராக இருந்த திரு. S. A. செல்வநாயகம் என்பவர் இவரை மட்/சம்மாந்துறை மெ.மி.த.க. பாடசாலைக்கு ஆசிரியராக நியமித்தார். (16-06-1958)

1960ம் ஆண்டு திரு. செல்லத்துரை ஆசிரியரைத் திருமணம் செய்தார். அதன் பேறாக அறுவர் மக்களைப் பெற்று மகிழ்ந்தார்.

சிறிது காலத்தின் பின்னர் அவர் சொந்தக் கிராமமான துறை நீலாவணை மெ.மி.த.க. பாடசாலைக்கு மாற்றப்பட்டார். இக்காலத்தில் அதாவது நீண்டகாலம் இப்பாடசாலையில் சேவையாற்றிய பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்/நாவிதன்வெளி அ.த.க. பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றார். அங்கு சில வருடங்கள் சேவையாற்றிய பின்னர் மட்/ துறைநீலாவணை மகா வித்தியாலயத்தில் சேவையாற்றும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. 01-10-1994இல் இளைப்பாறும்வரை அவர் அங்கேயே கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது சேவைக் காலத்தில் பல்லாயிரக்கணக்கான மாணவர் களுடன் பழகி அவர்களது கல்வி மேம்பாட்டுக்காக உழைத்தார். நன்றி மறவாத ஒரு சில மாணவர்கள் இவர் நோயுற்றிருந்தவேளை வந்து பார்வையிட்டுச் சென்றனர்.

இவ்வாறே அவர் சேவைக் காலத்தில் பழகிய ஆசிரியர்களிடமும் அன்பாகவும், பண்பாகவும் நடந்து கொள்வார். அவர்களுள் இறுதிவரை நட்புடன் பழகிய திருமதி. சோதிமணி முத்துவேல் அவர்கள் தமது நோயையும் பொருட்படுத்தாது வந்து இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டது குறிப்பிடக் கூடியதாகும்.

சமயத்தில் தீவிர ஈடுபாடுள்ளவராக இருந்தார். கோயில் திருப்பணிகளுக்கு தன்னாலான நிதியுதவி செய்தார். ஏழை மாணவர்களுக்கு கல்விக்காக உதவி புரிந்தார்.

இவர் கணவனுடன் இந்தியா சென்று புகழ்பெற்ற ஆலயங்களுக்குச் சென்று தெய்வ தரிசனம் பெற்றார். அத்துடன் இங்கிலாந்து, கனடா போன்ற நாடுகளுக்குப் பல தடவைகள் சென்று பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்களோடு மகிழ்ந்திருந்தார்.

நாகபூசனி அம்மாள், கௌரி அம்மாள், மயூராபதி அம்மன் ஆகிய தெய்வங்களிடம் அதிக பக்தி கொண்டவர். அவரது ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கிறோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அம்மா

அன்பின் இலக்கணம், அறிவின் கருவூலம்,
இன்பத்தின் ஊற்று, இனிமை தரும் பேச்சு,
பன்னூறு மாணவரைப் பயிற்றிய ஆசான் நீ
துன்பம் துடைக்கும் சுடரொளியே அம்மாவே!

வெண்ணீறு துலங்கும் நெற்றி,
விழிகளில் கருணை பொங்கும்,
திண்ணிய உடலுறுதி,
தெய்வ சிந்தனை நிறைந்த மனம்,
மண்ணிலே பிறவியெய்தி
மனிதருள் மாணிக்கமாகி
விண்ணிலே குடிபுகுந்த
விறல்மிகு தெய்வம் நீ அம்மா!

எங்களை ஈன்றெடுத்து,
இனியதாய் கல்வியூட்டி,
இங்கிதமாக வாழுமாறு
ஏற்றமாய் வழி சமைத்த,
பங்கயவதனத் தாயே
பலர் மெச்ச நீயும் வாழ்ந்து
செங்கதிரென மற்றவர்க் குழைத்து
செழிப்புடன் வாழ்ந்தாய் அம்மா!

ஏனம்மா எம்மைவிட்டு
இவ்வளவு சடுதியாக
வானகம் புகுந்து நீயும்
வாழ்ந்திட நினைத்தாய் அம்மா?
தானங்கள் பல புரிந்து
சந்ததிக்குதவி செய்து,
பானுவாய் பலன் பாராது
பாரினில் வாழ்ந்தாய் அம்மா!

*பிள்ளைகள்*
Dr. **வசந்தி,** Dr.**வாசுதன்,** Dr.**சிவதாசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இனிய மனையாளே

கொழிக்கின்ற செல்வமுதில் திளைத்திருந்த
குடும்பமது ஒன்றினிலே தோன்றித் தேக
எழிலினிலும் உள்ளத்து அழகினோடும்
என்றென்றும் சிறந்திருந்த உன்றனுக்கு
வழித்துணையாயமைந்து வந்து இன்று நின்
வாழ்க்கைக்கும் துணையாக வந்தேன் நானே
களிக்கின்றேன் உன்றனுடன் வாழ்ந்த நீண்ட
காலத்தை யெண்ணி யெண்ணி என்றும் தானே!

பின் தூங்கி முன் எழுவாய் என்றும் நீயே
பேரணிகள் நயத்ததே இல்லை நன்றி சொல்வேன்
நன் மக்கள் பலர் பெற்று வளர்த்தெடுத்தாய்
நலமோம்பிப் பல்லாண்டு பேணி வந்தாய்
கல்வி யென்னும் பயிர்வளர்த்துக் காலமெலாம்
செல் விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருந்தாய்
எல்லார்க்கும் நல்லவளாயான நின்னால்
இனிய பல பேறுபெற்றேன் இணைந்ததாலே.

பதிக்கு ஒரு தாதியெனப் பெற்றெடுத்த
பாலகர்க்கு ஆசானாய் இனிதிருந்தாய்
மதியுரைக்கும் அமைச்சனெனப் புத்திகூறி
மஞ்சத்தில் சுகம் தந்த மனைவியாக
கதிநீதான் என்றிறைவன் அளித்தான் நின்னை
காத்து நின்றாய் தாயாக இன்றுவரை
உதிரத்தை ஈன்றறுவர் மக்களீன்றாய்
உத்தமியே மகராசி உவக்கின்றேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெள்ளரிய மனவலுவும் நன்மை தீமை
தேர்ந்த நல்ல ஞானமுமாய்த் திகழ்ந்திருந்து
வள்ளுவனார் வகுத்ததத்தின் வழியில் நின்று
வாழுகின்ற அவ்வழியில் வாழ்கின்றேன் நான்
உள்ளத்தின் அழகினையே காட்டி நிற்கும்
உருக்கமுறு புன்முறுவல் நினக்கு உண்டு
எள்ளளவேயானாலும் தீமை யாண்டும்
எவர்க்கும் நீ செய்ததில்லை இனிய பேறே!

**- கணவன் -**
*(2005இல் வெளியிட்ட எனது பாச்சரம் நூலில் உள்ள கவிதை)*

## மனைவி பற்றிய என் கருத்து

*(எனது காலச் சுவடுகள் என்ற நூலில் உள்ளபடி)*

ஐம்பது ஆண்டுகள் குடும்பம் நடத்திவிட்டோம். எனவே இவ்விடத்தில் அவளைப் பற்றிச் சிறுவார்த்தைகள் கூறி வைப்பது பொருத்தமென எண்ணுகிறேன். ஐம்பது ஆண்டுகள் என்பது வாழ்க்கையில் நீண்டகாலப் பகுதி. அதிலும் இருவரும் தொடர்ந்து இணைந்திருப்பதும் அரிது. இந்த ஐம்பது ஆண்டுகளில் நான் அவளிடத்தில் எந்தக் குறைகளையும் கண்டதில்லை. நிறைகளையே கண்டேன். பின் தூங்கி முன் எழும் வாசுகி போலும், காலனிடம் வாதாடி கணவன் உயிர் மீட்ட சாவித்திரி போலும் தென்பட்டாள். எத்தனையோ இக்கட்டான நேரங்களிலெல்லாம் எனக்குத் தைரிய மளித்து உற்சாக மூட்டுவாள். நாங்கள் தனித்திருக்கும் வேளைகளில் எனது குறைபாடுகளை இடித்துரைப்பாள். பலர் முன் எனது குறைகளையோ, அன்றிப் பிழைகளையோ கூறியறியாள். எங்கள் இருவரதும் குடும்பங்களை இணைக்கும் பாலமாக விளங்கினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசம் மிகுந்த மாமி - அம்மா...

உங்கள் ஆழ்ந்த அறிவினாலும் அனுபவத்தினாலும் எங்களுக்கு எப்போதும் சிறந்த புத்திமதிகள் சொல்வீர்கள்.

எப்பொழுதும் மற்றவர்களுக்கு ஏதாவது நன்மை செய்ய வேண்டுமென்றே நினைப்பீர்கள். இந்த உணர்வு உங்கள் ஆசிரியை தொழிலில் இருந்து கிடைத்த அனுபவமோ தெரியாது. மற்றவர்களை புண்படுத்தாது புரிந்து, உணர்ந்து நடந்து கொள்வது உங்களுக்கே உரித்தான பண்பு.

கொழும்பில் இருந்து எங்களுக்கு (எனக்கு) பிடித்த உணவுகளையெல்லாம் செய்து அனுப்புவீர்கள். உங்கள் பேரக் குழந்தைகளைப்பற்றி பெருமைபடுவீர்கள். தொலைபேசியில் பேசும் போதெல்லாம் மகன் மகன் என்று அடிக்கடி கூறுவீர்கள்.

பெற்ற தாயை இழந்து மீண்டும் உங்கள் உருவில் பெற்று மீண்டும் இழந்து தவித்து நிற்கின்றேன்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டி நிற்கும்,

**மதிவாணன்**
*அன்பு மருமகன் - மகன்*
*லண்டன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே மறைந்தாய் அம்மா?

எங்கெங்கே பார்த்தாலும் அம்மாவே நின்னுருவம்
எங்கேங்கே கேட்டாலும் அம்மாவே நின் குரல்தான்
அங்கம் பதறுதம்மா அழுகை வருகுதம்மா
எங்கே மறைந்தாய் என் இனிய அம்மாவே?

வழிகாட்டியாயிருந்து வணங்கும் தெய்வமானாயோ?
ஒளிவிளக்காய் வாழ்ந்து ஒளிர வைத்தாய் எங்களையும்
குளிர் நிலவாய் விளங்கி குடும்பம் மகிழ்வித்தாய்?
விளிகளில் நீர்சிந்த வைத்து விடைபெற்றுப் போனாயோ?

பொறுமை, இரக்கம், ஈகை, அன்பு கைக் கொண்டு
பொறுப்புணர்ந்து நடக்கப் போதித்த அம்மாவே!
வறியோர்க்கிரங்கி வருவிருந்து பார்த்திருந்து
சிறப்பாக வாழ்ந்து சிவனடியைச் சேர்ந்தாயோ?

அள்ளியெடுத்தெம்மை ஆசையுடன் வளர்த்து
துள்ளித் திரியாது துடுக்கடக்கி வேளைக்குப்
பள்ளியிலே சேர்த்துப் பாடம் புகட்டி எங்கள்
உள்ளம் நிறைந்த அம்மா ஓடி ஒளிந்தாயோ?

காற்றில் கலந்தாயோ கடலில் ஒளித்தாயோ?
கூற்றுவன் கொண்டு சென்று கொடுமைகள் செய்தானோ?
தேற்றுவாரின்றித் தேம்பி அழுகின்றோம்
ஆற்றல் நிறைந்த ஆண்டவன் பதமடைய பிரார்த்தித்தோம்.

**வேணி மதிவாணன்**
*மகள்*
*(லண்டன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவைப் பற்றி...

எங்கள் அம்மாவைப் பற்றி எழுதுவதென்றால் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.

அம்மா எங்களை ஈன்று பாராட்டிச் சீராட்டி வளர்த்து, கல்வியூட்டி பலர் மெச்சும்படி வாழ வழிவகுத்த தெய்வமாகும். அவர் மற்றவர்க்கு ஒளிகொடுக்கும் மெழுகுவர்த்தி - தியாகச் சுடர்.

பிள்ளைகள் மட்டுமன்றி பிறரிடத்தும் அன்பு உடையவராகவும், உதவி புரிபவராகவும் விளங்கினார்.

அம்மாவாக மட்டுமன்றி ஒரு தோழியாகவும், வழிகாட்டியாகவும், ஆசானாகவும் விளங்கினார். விரதங்களில் ஈடுபாடு கொண்டவராக, பக்தி வழிசெல்பவராக விளங்கி தனது வாழ்க்கையில் அந்நெறி முறைகள் தவறாது வாழ்ந்தார்.

அம்மா! நீங்கள் எங்களை விட்டுப் பிரியவில்லை. என்றும் எங்களுடனேயே இருப்பீர்கள். முன்னர்போன்று எங்களை வழிநடத்துவீர்கள்.

*தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்*

*மகள்*

**பிறேமா கலைவாணன்**

*(லண்டன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான மாமி பற்றி...

மண்ணிலிருந்து விண்ணுக்கு இளைய மருமகன் விடுக்கும் ஓலை:-

மண்ணுலகில் பிறப்பவர்கள் எல்லாம்

மனிதர்களாக வாழ்ந்து தெய்வத்தின் மடியில் இடம்பிடித்துக்
கொண்டவர்கள்

இவ்வுலகில் அரிதே

ஆசையான குழந்தையாக

பாசமிகு பெற்றோருக்குப் படைத்தவன் கொடுத்தான்

கண்ணியமாய்க் கல்வி கற்று

பெற்றீர்கள் திறமைச்சித்தி

கலைவாணியின் அருளினால் கல்விக் கல்லூரியில்

தேர்ச்சி பெற்று கல்வி கற்பிக்கும் ஆசானானீர்கள்.

கண்ணான கணவனைக்

கரம்பிடித்து ஐம்பது ஆண்டுகள் வாழ்ந்தீர்கள்.

ஆசைக்கும் ஆஸ்திக்கும் அறுவரைப் பெற்றீர்கள்

பாசத்தையும், பண்பையும் ஊட்டி வளர்த்தீர்கள்

மக்களுக்கு ஏற்றமிகு கல்வி புகட்டி

அவையத்து முந்தி இருக்க வைத்தீர்கள்

இத்தனைக்கும் பட்ட கஷ்டம் பகர முடியாது

அமைதியின்மையால் நாடு அல்லோல கல்லோலப்பட்டபோது

போராடி மக்களையும் பாதுகாத்தீர்கள்

இளைய மகள் பிறேமாவை

எனக்கு மனையாளாகத் தந்தீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல மருமக்களைத் தேர்ந்து
மக்களுக்கு வதுவையும் செய்தீர்கள்
இல்லறத்தின் பெறுபேறாய்
எல்லா மக்களும் அளவோடு பெற்று
பேரன் பேத்திகளைப் பார்த்து களிப்படைந்தீர்கள்.
வாய்மை, தூய்மை, வள்ளன்மை, இறைபக்தி
இவைகளை அணிகளாகக் கொண்டீர்கள்.
அழைக்கும்போது "ஐயா", "மகன்" என்றே அழைத்தீர்கள்.
காலத்தால் அழியாத காவியம் ஆகிவிட்டீர்கள்.
கலங்கரை விளக்காக ஒளி தருவீர்கள்.
பாசமுடன் அழைத்த வாய் பேச மறந்ததென்ன?
பதறவிட்டு நெஞ்சையெல்லாம்
எங்கே பறந்தீர்கள்?
இறைவன் பதமடைய இறைஞ்சுகிறோம்.

**கலைவாணன்**
இளைய மருமகன்
(லண்டன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருமை மாமியாருக்கு மருமகளின் விழிநீர் அஞ்சலி...

அன்பான அன்னை நீங்கள்
அறிவுக்கு ஆசான் நீங்கள்
இல்லறத்தின் சிகரம் நீங்கள்
இணையிலா குணக்குன்று நீங்கள்
பாசமான கணவனுடன்
பண்பான மக்கள் மருமக்களும்
நேசமுடன் பேரப்பிள்ளைகளும்
தங்கள் நிழல்களில் வாழ்ந்தோமே
தேசம் விட்டு வந்தாலும் உங்கள்
பாசத்தில் தோய்ந்திருந்தோம்
சடுதியாக மறைந்து விண் புகுந்தீர்கள்
தங்களின் பாகமாக இருந்து இன்று
பரிதவித்து அழுகின்றோம்
ஏனம்மா அவசரமாய்
விண் புகுந்து விட்டீர்கள்
காலன் பொல்லாதவன்
கவர்ந்தானே பொன்னுயிரை?
நோய் வந்து புகுந்ததுவோ?
நொடிப் பொழுதில் மறைந்தீர்கள்?
வாழ்நாள் குறுகியதென்று
தங்கள் வாழ்வின் இறுதியால் உணர்ந்து விட்டோம்.
இருக்கும்வரை தங்கள்
இனிய நினைவுடன் வாழ்ந்திடுவோம்
கனமான இதயத்துடன்
கையசைத்து அனுப்புகிறோம்
எமக்கு வழிகாட்டியாயிருந்து
வாழவைக்க வேண்டுகிறோம்
இறைவன் பதம் சேர நீங்கள்
இறைவனை வேண்டுகிறோம்.

**கலைச்செல்வி சபேசன்**
*மருமகள்*
*(கனடா)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானறிந்த பெருமகள்....
# தங்கநாயகம் அம்மையார்....

**எ**னக்கு அமரத்துவம் அடைந்த திருமதி. தங்கநாயகம் குடும்பத்துடன் அவரது தங்கையின் மகளைக் கரம்பிடித்ததன் காரணமாக 12 வருடத் தொடர்பு உண்டு. நெருங்கிய தொடர்பு 3 வருடங்களுக்குட்தான் ஏற்பட்டது. இதன்மூலம் அவரைப் புரிந்து கொள்ளவும், தெரிந்து கொள்ளவும், அறிந்து கொள்ளவும் முடிகிறது.

வாழ்வாங்கு வாழுதல் சுலபமான ஒன்றல்ல. அதுவும் கவிஞன் கூறியதுபோல "கோடு கட்டி வாழ்ந்தவர்கள் எத்தனையோ, கொண்ட குறியும் தவறிப் போனவர்கள் எத்தனையோ?" இதற்கமைய தனதும் தனது குடும்பத்தினதும் வாழ்க்கை எப்படி அமைய வேண்டுமென கோடிட்டு அதன்படி வாழ்ந்தவர்தான் திருமதி. தங்கநாயகம் அம்மையார். அவர் எவ்வளவு தூரம் தன் குடும்பத்தை, பிள்ளைகளை நேசித்தார் என்பதை அக்கரைச் சீமையில் இருந்து வந்து அவர் பிள்ளைகள் இறுதி நேரம் வரை அவர் அருகில் இருந்த அந்த ஒரு நிகழ்ச்சியே எடுத்துக் காட்டுகிறது.

பிள்ளைகள் மட்டுமன்றி பேரக்குழந்தைகள், ஏனையவர்கள் மீதும் இறுதி மூச்சுவரை கரிசனை கொண்டிருந்தார். இதனாற்றான் "வெட்டாப்பு" என்ற உள்ளூர்ப் பத்திரிகையில் எனது ஆக்கமொன்றில் அவரை முன்னிலைப்படுத்தி உதாரணம் காட்டி எழுதி இருந்தேன்.

சமயத்தில் கூடிய நாட்டமும், ஆன்மீக பலமும் கொண்டவர். இதனாலேயே சதா தனது கணவனுக்காக, பிள்ளைகள் வாழ்வுக்காக விரதங்கள் அனைத்தையும் தவறாது கடைப்பிடித்து வாழ்ந்தார். மனதுக்கினிய பிடித்தமான உணவுகளைக் கூடப் புறந்தள்ளி விரதங்களையே கைக்கொண்டு வாழ்ந்த ஆன்மீகவாதி அவர். இவ்வான்மீக பலமே அவரை நினைத்ததை நினைத்தபடி சாதிக்கும் மனவுறுதியையும், தைரியத்தையும் அளித்ததெனலாம். சிலர் இது பிடிவாதம் எனலாம். நான் அது அவரது ஆன்மீக பலம் என்பேன்.

சமய ஆசாரங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள் இவைகளில் ஊறித் திளைத்திருந்தார். ஒருவன் எவ்வளவு படித்திருந்தாலும் ஆன்மீகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை என்றால் அவனுக்குள் ஒன்றுமில்லை என்பது அவரது தெளிந்த கருத்தாக அமைந்திருந்தது. அவரது வாழ்க்கை நெறியைத் தொடர்ந்து கடைப்பிடிக்க ஏதாவது நிதியத்தை நிறுவி இந்து சமயக்கல்வி மேம்பாட்டுக்கு ஒரு புலமைப்பரிசில் திட்டத்தை உருவாக்கினால். அது அவருக்கு வழங்கும் நல்ல காணிக்கையாக அமையும்.

அவருடன் கற்றவர்கள் அவரது திறமையைப் புகழ்ந்து பேசியுள்ளதை நான் கேட்டிருக்கிறேன். அவர் வாயிலாக வந்த உண்மையைக் கூறுவது பொருத்தமென எண்ணுகிறேன். கிறிஸ்தவ பாடசாலையில் கிறிஸ்தவர்களுக்கே வழங்கப்படும் ஆசிரிய நியமனம் இந்துவாக இருந்தபோதும் இவரது ஆசிரியரின் சிபார்சின் பேரில் இவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதையிட்டு முறைப்பாடு செய்தவர்களுக்கு வழங்கப்பட்ட பதில் இவர் ஒரு "இந்து கிறிஸ்தவள்" என்ற சிறப்பு. எனவே மற்றைய மதத்தையும் மதித்து வாழும் பண்போடு வாழ்ந்துள்ளார்.

ஆடம்பரத்தை வெறுத்த அவர்மீது உள்ளப்பற்றுதலைக் காட்டும் படியாக எதையும் கூறினால் பூரித்துப் போவார். "எல்லோரும் இன்புற்றிருப்பதையன்றி வேறொன்றும் நானறியேன் பராபரமே" என்பது இவருக்குப் பொருத்தமானதேயாம்.

தலைவனுக்குரிய சிறந்த பண்பு அவரிடத்தில் பிரதிபலித்தது. இதனைத் தன் குடும்ப வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்த ஆளுமையுள்ள தலைவர் அவர். இறுதி மூச்சு விடுவதற்குச் சற்று முன்புவரை கலகலப்பாகப் பேசி மக்கள், கணவனுக்கு மதியுரை கூறித் தேவாரம் பாடி இறைவனுடன் கலந்தார் என்றால் அவரது ஆன்ம பலம் எத்தகைய தென அறிந்து கொள்ளலாம். அவரது அன்பு, அரவணைப்பு, ஆளுமை மனதில் நீண்டகாலம் எதிரொலித்துக் கொண்டிருக்கும் என்பது திண்ணம்.

குடும்பத்துக்கு அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாதது. அவர்களுக்கு ஆறுதலைத்தரவும் அவரது ஆன்மா சாந்தியடையவும் இறை யருள் வேண்டுகின்றேன். அவர் ஆன்மா பக்தியுடன் அவர் வணங்கி வாழ்ந்த இறைவன் பாதக்கமலத்தில் அர்ச்சனைப் பூவாக அமையட்டும்!

**ஆனந்தா ஏ. ஜீ. இராசேந்திரம்**
(ஒன்றுவிட்ட மருமகன்)
முகாமையாளர்
தேசிய சேமிப்பு வங்கி - களுவாஞ்சிகுடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dear Ammammah

*You are a wonderful person and a very helpful lady. You are the best ammammah I ever had. Thank you very much for the advice and guidance you gave me, I will never forget you. I will miss you a lot. Rest in peace. Good bye!*

**Andrew**
(Grand son - Batticaloa)

## சாதனை நாயகி தங்கநாயகம் அக்கா பற்றிய சில நினைவுகள்

ஈழமணித் திருநாட்டின் மீன்பாடும் தேன்நாடாம் சகல வளங்களும் கொழித்திருக்கும் மட்டக்களப்பின் தென்எல்லையில் அமைந்துள்ள துறைநீலாவணை என்னும் பழம்பெரும் தமிழ் கிராமத்தில் எனது அக்கா தங்கநாயகம் 1934ம் ஆண்டில் பிறந்தார். இவர் 36 வருடங்கள் ஆசிரிய சேவையை தெய்வ சேவையாகப் போற்றிச் செயற்பட்டார். இவர் இக்கிராமத்தின் முன்னோடி ஆசிரியையாகும். தான் ஆரம்பக் கல்வி பெற்ற அவ்வூர் பாடசாலையிலேயே அதிக காலம் சேவை செய்தார்.

பயிர் செழிப்பாக வளர அதன் விதை நன்றாக இருக்க வேண்டும். ஆரம்பக் கல்விதான் எல்லாவற்றுக்கும் அடிப்படை. இந்த அடிப்படைதான் ஒருவனை பெருங் கல்விமானாக வர வழிவகுக்கும், ஆரம்பக் கல்வி ஆசிரியையாக அமைந்து சிறந்த பணியாற்றியதன் காரணமாக, இன்று இவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் சிறந்த நிர்வாகிகளாகவும், விஞ்ஞானிகளாகவும், மருத்துவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிபுணர்களாகவும், இயந்திரவியலாளர்களாகவும், கணக்காளர் களாகவும், ஊடகவியலாளராகவும் உள்நாடு, வெளிநாடுகளி லெல்லாம் பிரகாசிக்கின்றனர்.

ஆறாம் வகுப்பிலிருந்து கல்முனையில் G.B.S. தற்பொழுது உவெஸ்லிக் கல்லூரியில் விடுதியில் இருந்து கல்வி கற்றார். வெளியிடமொன்றில் இக்கிராமத்திலிருந்து கல்விகற்ற பெருமையும் இவரைச் சாரும். இவர் சிறந்த பெறுபேற்றுடன் 1952ம் ஆண்டு எஸ்.எஸ்.ஸி. (S.S.C)யில் பல திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்தார். இவரைப் பின்பற்றிப் பலர் வெளியிடங்களில் கல்விகற்று முன்னேறினர்.

இவர் மகாகவி பாரதியார் கண்ட புதுமைப் பெண்ணாகத் திகழ்ந்தார் என்றால் அது மிகையன்று. அவர் பல்வேறு துறைகளில் கால்பதித்துள்ளார். மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் கல்வி கற்கும்போது வலைப் பந்தாட்டக் குழுவில் இருந்து வெளிப் போட்டிகளில் பங்குபற்றி பல வெற்றிகளை ஈட்டிக் கொடுத்தார். மனையியலில் அதீத திறமை காட்டினார். தங்கள் பிள்ளைகளுக்கு மட்டுமல்லாது வெளியாருக்கும் Smoking செய்து அழகான சட்டைகள் தைத்துப்போட்டு அழகு பார்ப்பார். ஆண், பெண் இருபாலாருக்கும் உடைகள் தைப்பதில் திறமையுடையவராக விளங்கினார்.

வறிய மாணவர்களுக்கு உடைகள் தைத்து இலவசமாகக் கொடுப்பார். வகுப்பில் குறைவானவர்களை வீட்டுக்கு வரச்சொல்லிப் பாடம் சொல்லிக் கொடுப்பார்.

பெற்றோரின் சம்மதத்துடன் அதிபர் - எழுத்தாளர் செல்லத்துரை அவர்களைக் கரம்பிடித்து ஏறக்குறைய 51 வருடங்கள் இல்லற இன்பம் துய்ந்து ஆறுபேர் மக்களைப் பெற்று இன்புற்றார். இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது பிள்ளைகள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பிரபல வைத்தியர்களாக, இயந்திரவியலாளராக, ஆசிரியராக இருந்து பெற்றோருக்கு அணி செய்கின்றனர்.

நிறைய வாசிப்பார், ஆன்மீகம் சம்பந்தமான நூல்களை விரும்பிப் படிப்பார், பிறருக்கு உதவி செய்வார், பல கோயில்களின் நிர்மாணப் பணிகளுக்கு உதவிக்கரம் நீட்டியுள்ளார். சடுதியில் கோபம் வராது. குடும்பத்துக்கு அவர் செய்த தியாகங்கள் அளப்பரியது.

நான் எழுத்தாளனாகவும், யோகா சிகிச்சை நிபுணனாகவும் வர வழிவகுத்தவரும் அவரே. சில யோகாப் பயிற்சிகளையும் என்னிடம் கேட்டறிந்து செய்து கொண்டு வந்தார்.

பிறருடன் அன்பாகவும், பண்பாகவும் பழகுவார். திடமனதுடையவர், எதற்கும் இலகுவில் கலக்கமடையமாட்டார். இதனாலேயே குறுகிய காலத்தில் பல நண்பர்களை கொழும்பில் பெறக்கூடியதாக இருந்துள்ளது.

பூரணத்துவமான வாழ்க்கை வாழ்ந்த அக்காவின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும் தம்பி.

**செல்லையா துரையப்பா**
யோகா சிகிச்சை நிபுணர்
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கமான நாயகியே!

**"தோ**ன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று" எனும் பொய்யா மொழிக்கிணங்க "துறையூரின் புகழ்பூத்த முத்தொன்று பூவுலக வாழ்வினின்றும் உதிர்ந்தது" என்ற செய்தியறிந்து எனது உளத்து உணர்ச்சிகளை வெளியிட வார்த்தைகள் இல்லை. அமரர்கள் செல்லையா, சந்தணப்பிள்ளை தம்பதிகளின் தவப்பயனாக இவ்வுலகில் அவதரித்த இந்த அம்மா இன்று அழியாத முத்திரையொன்றைப் பதித்துச் சென்றுவிட்டார்.

கல்வியியலாளராகவும், குணக்குன்றாகவும், அன்பும், பண்பும் நிறையப் பெற்ற அன்னாரின் சேவையை நினைக்கும்போது நெஞ்சம் கனக்கிறது. அம்மாவிடம் கல்வி பயின்ற மாணவர்கள் கூட்டம் அளப்பரியது. இன்று அவர்கள் பல நாடுகளிலும், உள்நாட்டிலும் பிரகாசிப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

வந்தவரை வாவென்று முகம் மலர்ந்து வரவேற்று, பூரித்து, புன்னகைபூத்து அவரவர் தேவைகளை நிறைவேற்றுவதில் கருத்தாக இருந்தார். அவரது இனிமையான, கனிவான பேச்சு இன்றும் காதுகளில் எதிரொலிக்கின்றன. ஊர்ப்பிள்ளைகளை அவர் உருவாக்கி விட தன்பிள்ளைகள் தானாக உருவாகி பல பட்டங்கள் பெற்று பல நாடுகளில் சேவை செய்கின்றனர்.

பொது வாழ்விலும், இறைபணியிலும் செயல்பட்ட செல்லத்துரை ஐயாவின் பணிக்கு உந்துசக்தியாக இவர் விளங்கினார். இவர்கள் நிர்மாணித்த வயிரவர் ஆலயமும் முன்பக்க மதிலும், முத்து மாரியம்மன் ஆலயம், கண்ணகையம்மன் ஆலயம், சித்திவிநாயகர் ஆலயம் ஆகியவைகளுக்களித்த நன்கொடைகளும் என்றும் இவரை நினைவுறுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மோடு நீண்டகாலம் இருந்து சேவை செய்வார் என்று நினைத்தேன். ஆனால் இறை சித்தம் வேறாயிற்று. எல்லா எண்ணங்களையும் பொய்யாக்கி அவர் மாயமாக மறைந்துவிட்டார். இறைவன் பாதம் சேர தில்லையம்பலப் பிள்ளையாரை வேண்டுகிறேன்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**த. கணேசமூர்த்தி**

*கல்முனை Telecom ஓய்வு பெற்ற தொழில்நுட்பவியலாளர்*

*தில்லையம்பலப் பிள்ளையார் முன்னாள் தலைவர்*

*துறைநீலாவணை.*

## என் நினைவில் என்றும் நீங்கா....?

**தி**ருமதி. செல்லத்துரையை நான் மாமி என்று அன்புடன் அழைப்பேன். அவரை நினைக்கும்போது நினைவுகள் ஒன்றுடன் ஒன்று முட்டி மோதுவதனால் வார்த்தைகள் வருவதாக இல்லை. அவரின் திறமை, அர்ப்பணிப்பு, அருமை, பொறுமை, முயற்சி, தியாகம் இவைகளில் எதைச் சொல்வது?

துறைநீலாவணைக் கிராமத்தில் இவரிடம் கல்விகற்று வெளியேறி உலகின் பல பாகங்களிலும் இன்று சேவை செய்யும் பலர் இவரின் திறமைக்குச் சான்றாக விளங்குகின்றனர். இக்கிராமத்தில் ஆரம்பக் கல்வி புகட்டி மாணவர்களை திறமையாளர்களாக உருவாக்கியதில் இவர்களின் பங்கு அளப்பரியது.

மரணம் மனிதனின் உடலைத்தான் இல்லாதொழிக்கும். ஆனால் மனிதத்தை மரணத்தால் கொல்ல முடியாது. இவரின் சேவைக்கு இவரது பிள்ளைகள் சான்றாக அமைகின்றனர். நான் இச்சமூகத்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை செய்தேன் என்றால் அதற்கு இவருடைய ஆளுமையும் அர்ப்பணிப்பும் என்னுள் ஏற்படுத்திய தாக்கமே காரணமாகும்.

சிற்பியொருவன் கல்லைச் செதுக்கி கலைவடிவம் கொண்ட உருவங்களை ஆக்குவதுபோல் இவரும் மாணவர்களை கற்பித்தல் படிமுறைகளால் நல்ல திறமையுள்ள மாணாக்கர்களாக உருவாக்கினார். மாணவரிடையே மறைந்திருக்கும் திறமைகளை இனம் கண்டு கொள்வதில் இவர் மிகவும் திறமைசாலி. "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்பதற்கு இவர் வாழ்வு சான்றாகும்.

இவருடைய வாழ்வின் வெற்றிக்கு அவருடைய கணவர் பக்க பலமாக இருப்பதாக அடிக்கடி கூறுவார். கணவன் எழுத்தாளனாக வலம்வர இவர் உந்து சக்தியாக விளங்கினார்.

அவரை நினைக்கும்போது நெஞ்சம் கனக்கிறது, வார்த்தை முட்டுகிறது, கண்கள் குளமாகின்றன. அவரது வாழ்வை உதாரணமாகக் கொண்டு வாழ்வது அவருக்கு செய்யும் நல்ல நினைவஞ்சலியாகும். அவர் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சும்,

**திருமதி. சோதிமணி முத்துவேல்**
*(உடன் கற்பித்த ஆசிரியை)*
**துறைநீலாவணை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளில் நிழலாடும் சில சம்பவங்கள்....

**பி**றருடைய குணாதிசயங்களைப் பாராட்டிப் பேச வேண்டும். அனைவருக்கும் நன்மை செய்யும் பண்பு அமைந்தவராகவும் இருக்க வேண்டும். இந்த இயல்பினை உடையவர்கள் பிறர் நன்மதிப்பைப் பெற்றுக் கொள்வர் என்று மகாத்மாகாந்தி கூறியுள்ளார். இந்த வரிகளுக்குச் சொந்தக்காரராகிவிட்ட அமரத்துவமடைந்த திருமதி. தங்கநாயகம் அம்மணி ஆசிரிய திலகம் அவர்களின் நினைவுகளை நினைவூட்டிப் பார்க்கும்போது அதனை எழுதிக் கொண்டே இருக்கலாம்.

மட்டக்களப்புத் தமிழகத்தின் தென்திசையில் அமைந்துள்ள இயற்கை வளமும், வனப்பும் நிறைந்த கிராமமே துறைநீலாவணை என்ற பழந்தமிழ்க் கிராமமாகும். செந்தமிழும் சிறப்புற்று விளங்கும் இந்த மண்ணிற்கு மகிமை சேர்த்தவர்களுள் முதன்மை பெறுபவர்கள் திரு. திருமதி. செல்லத்துரை தங்கநாயகம் ஆகியோர் எனலாம். ஏனெனில் இதற்கு அவர்களது பன்முகப்படுத்தப்பட்ட சமுதாயப் பணிகள் சான்றாகும்.

இந்த வகையில் அமரத்துவம் அடைந்த ஆசிரிய திலகம், அம்மணி அவர்களின் கணவரைப் பற்றி சில வரிகள் எழுதிவிட்டு பின்னர் அமரர் தங்கநாயகம் அவர்கள் பற்றி எழுதுவது நன்றாக இருக்குமென நினைக்கின்றேன்.

துறைநீலாவணையின் கல்வி வரலாற்றில் தனித்துவமான இடத்தைப் பிடித்துக் கொண்டவர் செல்லத்துரை ஐயா அவர்கள். சமூகப் பற்றாளர்களுள் இவரும் ஒருவர். சிறந்த ஆளுமை மிக்க கவிஞராக வலம் வருபவர், கிழக்கிலங்கையின் மூத்த கவிஞர் நீலாவணனின் பண்ணையில் வளர்ந்து ஆளாகிய கவிஞர்களுள் ஒருவர், சமூக செயற்பாட்டாளர் வரிசையில் அவருக்கு தனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிடமுண்டு. சைவம் தழைத்தோங்க இந்து சமய வளர்ச்சிச் சபையை நிறுவி ஆற்றிய பணிகளோ அளவிலாதன. இன்று ஆலயங்களின் நிர்மாண, புனர்நிர்மாணப் பணிகளுக்கு நிதியுதவி புரிந்தது இப்படி இவரது பணிகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஒரு கிராமம் தலைநிமிர வேண்டுமானால் கல்வியில் முன்னேற வேண்டும். இத்தகைய கல்வி உரிய முறையில் கிடைக்காது. இக்கிராம மக்கள் தலைநிமிர்ந்து நிற்க முடியாது இருந்தனர். இக்காலகட்டத்தில் ஆசிரியராக இக்கிராமத்துக்கு வந்த திரு. செல்லத்துரை ஏனைய கிராம ஆசிரியர்களுடன் இணைந்து தன்னலம் கருதாது பணியாற்றினார். இவரது கல்விப்பணி மிகவும் கனதியானது. இவரிடம் பயின்ற மாணவன் என்ற வகையில் அதனை நான் அறிந்திருந்தேன். இதனாலேயே இவரது "பாச்சரம்" என்னும் கவிதைத் தொகுப்பு நூல் 2005ம் ஆண்டு மட்டக்களப்பில் வெளியிடப் பட்டபோது, அவரைப்பற்றி கவிதை பாடியவன் என்றவகையில் கல்வித் தந்தையென விழித்துக் கவிதை பாடியவன் என்றவகையில் இதனைக் கூறலாம். அவரின் ஆக்கங்களுக்கு, இலக்கியப் பணிகளுக்கு உந்து சக்தியாக இருந்தவர் திருமதி. தங்கநாயகம் அம்மையாராகும்.

சமூக உருவாக்கப் பணியில், சமூகப் பாதுகாப்புப் பணியில் இடையறாது உழைப்பவர்கள் தன்னலமற்ற சேவையாற்றும் ஆசிரியர்களே. அறிவை ஊட்டுபவர்களும் உயரிய மனப்பாங்கை ஆற்றல்களை இனங்கண்டு ஊக்குவிப்பவர்களும் ஆசிரியர்களே. எனவே எழுத்தறிவித்தவன் இறைவன் என்று போற்றப்படுகிறான். மாதா, பிதாவுக்கு அடுத்து குரு என்று மதிக்கப்படுகிறான்.

இத்தகைய மதிப்புக்கும், கௌரவத்துக்கும் உரிய ஆசிரியர்கள் உண்மையான, மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டான வாழ்வு வாழ வேண்டும். இத்தகைய குணாம்சங்கள் பொருந்தியவராகத் திருமதி. தங்கநாயகம் விளங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று கல்வியில் பின்தங்கி இருந்த இவ்வூர் இன்று மிகவும் முன்னேறி இருக்கிறது. ஏன் இந்த மாற்றம் என சற்று ஆராய்ந்து பார்த்தால் உண்மை தெற்றெனத் விளங்கும். ஆரம்பக் கல்வியை அர்ப்பணிப்புடன் ஊட்டிய பெருமைக்குரியவர்களாக முன்னோடி ஆசிரியையான திருமதி. தங்கநாயகமும் மற்றும் காலஞ்சென்ற திருமதி. இராசம்மா வேலுப்பிள்ளை, எம்மத்தியில் வாழும் திருமதி. சோதிமணி முத்துவேலுடன் திருமதி. அழகேஸ்வரி நீலாவணனையும் குறிப்பிடலாம்.

இவர்கள் யாவரையும் "ஆசிரியர்கள்" என்று குறிப்பிடுவது அரிது. "அக்கா" என்று பாசத்துடன், உரிமையுடன் அழைக்கும் மரபு கிராமங்களில் உண்டு.

ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பாள் என்பது பொதுவான எண்ணம். கணவன், மனைவி இருவருக்கும் இடையில் காணப்படும் இறுக்கமான அன்பின் அடையாளமே இது. திரு. செல்லத்துரை ஐயாவின் "காலச் சுவடுகள்" நூலில் இந்த உண்மை புலப்படுகிறது. அவர்கள் வாழ்வில் இறுக்கமான அன்பு கலந்த இல்லறம் இருந்தது.

அமரர். தங்கநாயகம் ஆசிரியர் அவர்களிடம் கல்வி கற்கும் பேறு எனக்குக் கிடைக்கவில்லை. அவருடன் உடனாசிரியராகச் சேவை செய்யும் பேறு எனக்குக் கிட்டியது. எனது மகன் அவரிடம் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றான்.

அவருடன் பணியாற்றிய அந்தக் காலம் ஒரு பொற்காலம் என்றால் மிகையல்ல. இவர் மாணவர்களைப் பெயர் சொல்லி அழைப்பது குறைவு. பெரும்பாலும் மகனே! மகளே! என்று பாசமுடன் விழித்து அழைப்பார். இதனாற் போலும் மாணவர்கள் இவரை ஒரு தாயாகக் கருதிக் கல்வி கற்றனர்.

சக ஆசிரியர்களை தம்பி, தங்கை என்றுதான் அழைப்பார். என்னை "மைத்துனன்" என்று கூப்பிடுவார். இன்றுள்ள ஆசிரியர் களிடம் இத்தகைய நற்குணங்கள் உள்ளனவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விச் செயற்பாடுகளில் இவரிடம் கற்றது ஏராளம். இணைக் கலைத்திட்டச் செயற்பாடுகளை ஆரவாரமற்று அமைதியாகச் செய்து முடிக்கும் ஆசிரியப் பண்பு!

1993ம் ஆண்டு இவரிடம் கல்வி கற்ற மாணவர்களில் பதினைந்து பேர் பல்கலைக்கழகத்துக்குத் தேர்வானபோது அமரர்கள் இராசம்மா வேலுப்பிள்ளையையும், தங்கநாயகம் செல்லத்துரையையும் நினைவு கூர்ந்து பேசியது எனது ஞாபகத்தில் வருகிறது. அன்று இவர்கள் ஊன்றிய விதைகள் இன்று விருட்சங்களாக வளர்ந்து நிற்கின்றன.

துறைநீலாவணை மகாவித்தியாலயத்தில் ஆசிரியச் சேவையின் இறுதியான 1994ம் ஆண்டில் இவர் இளைப்பாறியபோது இவருக்கு மாணவர்களாலும், ஆசிரியர்களாலும் சூட்டப்பட்ட மலர் மாலைகள் மலை போன்று காட்சியளித்தது.

இவரது ஒன்றுவிட்ட சகோதரரான (துறையூர் நாதி) நா. திசவீரசிங்கமும் நானும் கவிதைகள் பாடி இவரை வாழ்த்தினோம். ஆனால் இன்று இரங்கல் கவிதை எழுதும் நிலையில் உள்ளேன். அந்தோ பரிதாபம்!

துறைநீலாவணை மகா வித்தியாலயத்துக்கு ஒரு விளையாட்டு மைதானம் தேவையாக இருந்தது. இச்சந்தர்ப்பத்தில் துறையூர் க. செல்லத்துரையின் "காலச் சுவடுகள்" நூல் வெளியீடு செய்யும் ஒரு சந்தர்ப்பம் இம் மகா வித்தியாலயத்திற்கு ஏற்பட்டது. காலஞ்சென்ற திரு. நாகேந்திரன் அவர்களின் மகன் இயந்திரவியலாளர் மேகநாதன் அவர்கள். திருமதி. செல்லத்துரை அவர்களின் தங்கை மகன். அவர் நூல் வெளியீட்டின் போது முதற்பிரதி பெறுபவராக வந்திருந்தார். பாடசாலையின் நிலையை அறிந்து விளையாட்டு மைதானத்தை ரூபா. இருபது இலட்சம் செலவு செய்து அமைத்துக் கொடுத்துள்ள கொடை வள்ளல், புரவலர் மேகநாதன் இயந்திரவியலாளர் அவர்களையும் இச்சந்தர்ப்பத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவு கூர்வது பொருத்தமானதென நினைக்கிறேன். அவருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். அவருடைய பெரிய தாயாரான திருமதி. தங்கநாயகம் இந்த நிகழ்வைப் பார்த்து பெருமகிழ்வெய்தி அவரை மிகவும் பாராட்டினார்.

ஸ்ரீ தில்லையம்பலப் பிள்ளையார் ஆலயத்துக்கு பெருமளவு நிதியை அளித்துவிட்டு மௌனம் காத்த அன்னை ஸ்ரீமுத்து மாரியம்மன் ஆலயம், ஸ்ரீ சக்தி விநாயகர் ஆலயம், ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயம், என்பனவற்றுக்கும் இலட்சக் கணக்காக நிதியுதவி புரிந்த அன்னையவர். இவரது சிறந்த, திறந்த மனதுக்குத்தக சிறந்த மருமக்களான பொறியியலாளர் சிறீரங்கநாதன், லண்டன் மாநகரில் தொழிலதிபர்களாக உழைப்பால் உயர்ந்து நிற்கும் மதிவாணன், கலைவாணன் ஆகியோர் கிடைத்தமையாகும்.

மூன்று டாக்டர்களையும், ஒரு பொறியியலாளரையும், இரு கலைப்பட்டதாரிகளையும் உருவாக்கிய உத்தமியவர்.

இவரிடம் கல்வி கற்ற ஆயிரக்கணக்கான மாணவர்களில் பலர் இன்று உள்நாட்டிலும், கடல் கடந்த நாடுகளிலும் வைத்தியர் களாக, இயந்திரவியலாளர்களாக, கணக்காளர்களாக, கல்வி நிருவாக அதிகாரிகளாக, ஆசிரியர்களாக, அதிபர்களாகப் பணியாற்று கின்றனர் என்பதே இவரது சேவைக்கு எடுத்துக் காட்டாகும்.

காலத்தால் அழியாத கல்வித் தொண்டாற்றிய அன்னை தங்கநாயகம் அவர்கள் காலமாகவில்லை, காவியமாகிவிட்டார். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகிறேன்.

**செல்லையா பேரின்பராசா**
*ஊடகவியலாளர், ஆசிரியர்,*
*துறைநீலாவணை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை!

**வ**ண்ணத் தமிழும், சன்மார்க்க நெறியுமிரு
கண்ணாகப் போற்றி நின்ற கல்விக் கவின் சுடரே!
எண்ணரிய சேவையினை எமக்களித்த முழுமதியே
மண்ணிலே வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த
பெண்ணணங்கே! பெற்றாய் பெரும்பேறு
விண்ணவர்க்குக் கற்பிக்க விரைந்தனையோ அம்மாவே!

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று
வானுறையும் தெய்வமாயாகிவிட்ட செழுஞ்சுடரே!
பயிற்றிய மாணவர்கள் பல நாடுகளில் வாழ்ந்து - உயர்
பதவிகளில் அமர்ந்திருந்து தந்தார் பெரும் பரிசு.

ஊருக்குத் தெரியாமல் உலகைவிட்டுச் சென்றனையோ
அன்பாலும், பண்பாலும் அருமந்த பணியெனும்
கண்திறக்கும் கல்விப் பணிசெய்து திருப்தியுற்று
பெண்மைக்கிலக்கணமே இன்பத்தமிழ்ப் புலவன்
செல்லத்துரை இன்று தேம்பி அழுவதையும்
வைத்தியகலாநிதி வசந்தி, கலைப்பட்டதாரிகள்
வேணி, பிறேமா, பொறியியலாளர் சபேசன்,
வைத்திய கலாநிதிகள் வாசுதன், - சிவதாசன்
வருந்தி அழுவதற்கு வார்த்தை இன்றித் தவிப்பதையும்
உற்றார் உறவினர்கள் ஒப்பாரி வைப்பதையும்
ஒரு கணம் நீ பாராயோ ஒப்பிலா மாமணியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்கள் தழைக்க அறப்பணிகள் பல புரிந்தாய்,
இல்லை என்று வந்தார்க்கு இயன்றவரை உதவி செய்தாய்,
உற்றார், சுற்றத்தார்க்கு உதவினாய் இயன்ற வரை,
புன்முறுவல் தவழ் வதனம், பொட்டும் பூச்சும், நெற்றியிலே,
இல்லையென்று வந்தார்க்கு இயன்றவரை உதவி செய்தாய்,
இன்முகமும், இன்சொல்லும் இதயம் தொடும் பேச்சும்,
அன்னையாய் நீ விளங்கி அருளாம் நெறி காட்டி
விண்ணேகி இறைவனையே சேர வேண்டுகிறோம்.

**சாமி. ஆசைத்தம்பி**
*ஆசிரியர்*
*துறைநீலாவணை*

## அன்பின் உறைவிடமான அன்ரி *(Aunty)*க்கு....

**எ**ங்களுக்கு ஒரு அன்ரி (Aunty) மட்டுமே இருந்தார். ஆனால் இனி யாரை இவ்வாறு அழைப்போம். நீங்கள் எனக்கு வழிகாட்டியாக திகழ்ந்தீர்கள். எப்போதும் மனதுருகக் கதைப்பீர்கள். உங்களோடு கதைத்தால் எல்லாக் கவலையும் பறந்தோடும்.

துறைநீலாவணை எனும் ஓர் அடிப்படை வசதியற்ற கிராமம் இன்று உலகலாவிய அளவில் பேசப்படுகிறது என்றால் அதற்கு நீங்கள் ஆற்றிய சேவை என்றால் மிகையாகாது. தங்கநாயகம் அக்கா என்று எமது கிராமத்தின் மதிப்புக்குரியவராக திகழ்ந்தீர்கள்.

இறுதி மூச்சுவரை பிள்ளைகளுக்காகவே வாழ்ந்து உங்களது இன்பங்களைத் தியாகம் செய்தீர்கள். கடைசி ஓரிரு நாட்களில் உங்களோடு இருக்க இறைவன் தந்த கிருபைக்காக நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்கிறேன். அவ்வேளையிலும் உங்களது துன்பத்தை மறைத்து எனக்காக கவலைப்பட்டு "நன்றாக சாப்பிடு மெலிந்து போய்விட்டாய்" என்று கூறினீர்கள். இவ் அன்பை நான் இனி எங்கே காண்பேன்? உங்களது புத்தி சாதுர்யம், சமயோசித பேச்சு என்பன எனது வாழ்க்கையில் பல பிரச்சினைகளை தீர்க்க உதவியதுமல்லாமல், நீங்கள் எனது வழிகாட்டியாகவும் விளங்கினீர்கள்.

நீங்கள் ஓர் மெழுகுதிரி போன்றவர். மற்றவர்களை ஒளிரச் செய்ய நீங்கள் உருகினீர்கள். அந்த மெழுகுவர்த்தி இன்று எங்களை விட்டு நீங்கினாலும், உங்களது நினைவுகள் எங்கள் உள்ளமெல்லாம் ஒளிர்ந்து கொண்டே இருக்கும்.

அன்றி உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**நாகேந்திரன் மேகநாதன்**
*சிரேஷ்ட பொறியியலாளர்*
*பெறா மகன்*
*மட்டக்களப்பு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவே!

"அம்மா என்றழைக்காத உயிரில்லை. அம்மாவை வணங்காத உறவில்லை" என்று சொல்வதற்கமைய நாங்களும் அம்மா மேல் அளவு கடந்த பாசத்தை கொண்டிருந்தோம். இன்றும் கொண்டிருக்கிறோம். அவர்மீது எங்களுக்கு ஒரு மதிப்பும், மரியாதையும் இருந்தது. வீட்டில் சாதாரணமாக ஒரு நண்பருடன் பழகுவது போல்தான் அம்மாவுடன் பழகுவோம். அம்மா தன் சகோதர சகோதரிகளின் மேல் அளவு கடந்த பாசத்தை வைத்திருந்தார். தன் சகோதர, சகோதரிகளின் பிள்ளைகளும் நன்றாக இருக்க வேண்டுமென்று கடவுளை வேண்டுவார். அம்மாவுக்கு நிறையவே நண்பர்கள் இருந்தார்கள். அம்மா மற்றவர்களோடு பழகும் விதம் மற்றவர்களை கவர்ந்திருந்ததென்று நினைக்கிறேன். அம்மா ஒரு சிறந்த இராஜ தந்திரி போன்று எங்கள் குடும்பத்தில் செயற்பட்டார். எந்த ஒரு பிரச்சினையையும் மிகவும் ஆச்சரியமுறத் தக்கமுறையில் கையாள்வார். நாட்டில் பயங்கரவாதப் பிரச்சினை இருந்த கால கட்டத்தில் எங்கள் குடும்பம் தொடர்ச்சியாக பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத் திருந்தது. அவ்வாறான காலகட்டத்தில் மிகவும் துணிச்சலாகவும், சாதூரியமாகவும் செயற்பட்டிருந்தார். அம்மா மற்றவர்களின் துன்பத்திலோ, இன்பத்திலோ பங்கெடுப்பதில் பின் நிற்பதில்லை. யாருக்காவது ஏதாவது துன்பமான சம்பவம் நிகழ்ந்து விட்டால் மிகவும் கவலையுடன் இருப்பார். அதேபோல் இன்பத்திலும் பங்கு கொண்டார். மாணவர்கள் சிறந்த மதிப்பெண்கள் எடுக்கும்போது அவர்களைத் தட்டிக் கொடுப்பார். அன்பளிப்பும் வழங்குவார். அவர் கொழும்பில் இருக்கும்போது ஊரில் ஏதாவது சம்பவம் நடந்தால் அது துன்பநிலையோ அல்லது இன்பநிலையோ தன்னால் உடனடியாக போகமுடியாவிட்டால் தொலைபேசியில் தொடர்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு அவர்களுடன் கதைப்பார். ஊருக்குப் போகும்போது கட்டாயம் அவர்களைச் சென்று சந்திப்பார்.

அம்மா சிறந்த பண்புகளைக் கொண்டிருந்தார். அதை மற்றவர்களும் கடைப்பிடிக்க வேண்டுமென்று எதிர்ப்பார்த்தார். அம்மா நோய்வாய்ப்பட்டதை கேள்வியுற்று அவருடன் தொலைபேசியில் ஆறுதல் வார்த்தைகள் கூறியவர்கள் பலர்.

அவர் இறக்கும்போதுகூட மிகவும் நிதானமாக இருந்தார். முழுமையாக தேவாரம் ஒன்றைப் பாடிய பின்தான் எங்களை விட்டுப் பிரிந்தார். அம்மாவினுடைய வாழ்க்கை எங்களுக்கு ஒரு கலங்கரை விளக்குப்போல் இருக்கிறது. அவர் ஒரு பல்கலைக்கழகம் போன்றவர். எல்லாத் துறைகளிலும் தன் அறிவை வளர்த்திருந்தார். எனது மனைவியுடன் மிகவும் அன்பாக பழகுவார். எனது மனைவியின் எழுத்தாற்றல் அம்மாவை மிகவும் கவர்ந்திருந்தது. அவரை ஊக்கப்படுத்துவார்.

அம்மா எங்களை விட்டுப் பிரிந்துவிட்டார் என்பதை நம்பமுடியாமல் இருக்கிறது. அவருக்கு நாங்கள் செய்யக்கூடியது ஒற்றுமையாகவும் மற்றவர்களுடன் அன்பாகவும் இருப்பதுதான். அம்மாவின் இத்துயர் செய்திகேட்டு எங்கள் துயரத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் எங்கள் நன்றிகள் உரித்தாகட்டும்.

**சபேசன்**
(மகன்)
கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *To my beloved Ammamma,*

People leave footprints in the sand, only to be washed away by water, but it's only our loved ones that leave footprints in your heart that last forever.

I was asked to write something about what you meant to us but even a million words cannot describe what you meant to me.

A piece of me is missing, and always will be, but that doesn't stop me from remembering the wonderful times I spent with you from persuading me to practise my instruments, to cook my meals every day in the time you were here.

If tears could build a stairway,

and memories a lane, I'd walk

right up to heaven and bring you

home again.

May You Rest In Peace

Always remembering you,

**Sharavanan**

*Grand Son*

*London.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ammamma, the times that we have shared together are some of the best memories I will ever have. You are such an inspiration, you have brought joy into so many people's lives, and I feel blessed that I was one of them. Your smiling face, the warmth in your eyes; these are images that I will never forget. You always did what was best, and put others before yourself. It feels as though I have lost a piece of me, but you will always be with us forever. You have led an amazing life, your love for everyone and strong willed attitude has led the way for me to live the life I do today. I was so lucky to have an Ammamma like you, and even though you are not with us anymore, you will still be with us, in our hearts. You are such a big loss to us, but I know that you are peaceful now in God's welcoming arms. You have raised a great strong family, and have seen your children and grandchildren grow. I will never be the same, but I will try to stay positive, and cherish the memories that we shared. You were such a strong person, and now finally the pain has ceased and you can be free and peaceful again. I will never forget you and you will always be in my heart. May you rest in peace.

**Abhirami**

*Grand Daughter*

*London.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

My beloved Ammamma, there are no words good enough to describe how amazing you are. I have never known anyone who was unselfish, caring and genuine as you are. You always worried about everyone else, even through your pain, always taking an interest and genuinely caring. I will never forget your welcoming smile and dignified nature. I feel and emptiness knowing you're not here but know you can rest peacefully after the wonderful life you've led and the great family you've created, in God's welcoming arms. I will always remember your wise words and things you have taught me. You are not only a grandma to me, but the inspirational person I have ever met and I feel so proud to be your granddaughter. You will never be forgotten.

**Sharmika.**
*Grand Daughter*
*London.*

Dear Ammamma, I will always miss you. Your smile, your laugh, everything. You are so kind and considerate and always made sure everyone else was so comfortable before thinking about yourself. Every time I saw you I could feel the love emanating from you so powerfully. I know now you have gone to a better place and I take some comfort from that, even though the pain of losing you will never be gone.

**Arun.**
*Grand Son*
*London.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ammamma, words cannot describe how much love and gratitude I feel towards you. I will never forget your kind loving nature and selflessness. You had such a jolly sense of humour and were always smiling. I am thankful to God that your suffering has finally come to an end and you have reached a better place to watch down on us from. Your guidance will stay with me forever.

**Kavivarnan.**
*Grand Son*
*London.*

Ammamma, we lost you for ever. You have sacrificed your life for us. We will fufil your expectation. May God bless you.

**Dinesh**
*Grand Son*
*Colombo.*

Appammah! we will not hear your sweet voice no more. You looked after us when we were in Sri Lanka. Rest in Peace.

**Aswin & Deveniya.**
*Grand Son & Grand Daughter*
*Australia.*

Appammah! you always talk to us over the phone. We couldn't hear your voice any more. Now you are free from all your sufferings. You Rest in Peace.

**Sylan & Sylani**
*Grand Son & Grand Daughter*
Australia.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

*17-08-2010* அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் துயரச் செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் வார்த்தை கூறியவர்கள், தொலைபேசியூடாக, தந்தி மூலம் தங்கள் துயரத்தைப் பகிர்ந்து கொண்டவர்கள், மலர் வளையங்கள், மலர்க் கொத்துக்கள் வைத்தவர்கள், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்கள், சரீர உதவி புரிந்தவர்கள் அனைவருக்கும் இவ்நினைவு மலரை அச்சிட்ட அனுஷ் பிரின்டர்ஸ், அச்சிட உதவிய தொழிலதிபர் திரு. ஈஸ்வரன் கதிரேசன், யோகா சிகிச்சை நிபுணர் செல்லையா துரையப்பா அவர்களுக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். தனித்தனியே நன்றி கூறமுடியாமைக்கு வருந்துகின்றோம்.

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரம்பரைப் ப

*உலகநாதன் + *கற்பகம்

*வயிரிப்பிள்ளை *சரவணமுத்து *சின்னப்பிள்ளை *சந்தணப்பிள்ளை *தங்கப்பிள்ளை

*சந்தணப்பிள்ளை + *

*பொன்னம்மா *சாமித்தம்பி இராசம்மா *சின்னத்தம்பி ***தங்கநாயகம்** நேசமணி து

*தா

வசந்தி
+
சிறீரங்கநாதன்

- தினேஷ்
- அபிலாஷ்
- கைலாஷ்

கிருஷ்ணவேணி
+
மதிவாணன்

- அருண்
- அபிராமி
- சரவணன்


பிறேமறாஜினி
+
கலைவாணன்

- கவிவர்ணன்
- சர்மிகா

கல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரப் பரம்பல்




*அமரர்களைக் குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய், எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

Printed By: Anush Printers, Col-11. Tel: 0777-244893
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org